மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் இலாக்காவிற்கு சில இடங்களில் இலவசமாகவும், சில இடங்களில் பாதி பணமும், சில இடங்களில் கிரயமும் வாங்கி, நிலைமைகளுக்கு ஏற்றவாறு அரசு நிலங்களைக் கொடுக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்கள் 25, 26 மற்றும் 27 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

Memorandum from the Bar Association, Nagappattinam

*Q. No. 28—Thiru R. UMANATH: Will the Hon. th Minister for Co- operation and Law be pl ased to state—

(a) whether the Government have received a memorandum; dated 16-3-1981 from the Bar Association of Nagapattinam;

(b) if so, the details thereof and

(c) the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) கிழக்கு தஞ்சாவூருக்கான நாகப்பட்டினத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் அமைந்துள்ள கட்டிடம் நெடுநாளைக்கு முன்னதாகக் கட்டப்பட்டதென்றும் அது தற்போது இடிந்து விழும் நிலையில் உள்ளதென்றும் நாகப்பட்டினம் வழக்கறிஞர்கள் குழு முறையிட்டுள்ளது. அக்கட்டிடத்தில் வழக்கறிஞர்களுக் கென அறையேதுமில்லையென்றும் குடிநீர் வசதி மற்றும் கழிவறை வசதிகள் ஏதுமில்லை என்றும் சொல்லியுள்ளனர். எனவே, மேலே சொன்ன நீதிமன்றம் அமைந்துள்ள கட்டி டத்தை மாற்றியமைக்க வேண்டும். இக்கட்டிடத்தில் குடிநீர் வசதி மற்றும் கழிவறை வசதிகள் செய்துதர வேண்டு மன நாகப்பட்டினம் வழக்கறிஞர்கள் குழு வேண்டியுள்ளது.

(இ) இது சம்பந்தமாக தலைமைப் பொறியாளர் பொதுப் பணித்துறை (கட்டிடங்கள்) அவர்களை கலந்தாலோசித்து வரை படங்களையும் மதிப்பீடுகளையும் அனுப்புமாறு உயர்நீதி மன்றத்தை கேட்டுக்கொள்ளப்பட்டது. நாகப்பட்டினத்திலுள்ள கிழக்கு தஞ்சாவூருக்கான மாவட்ட நீதிமன்ற கட்டிடத்திற்கு பழுதுபார்க்க மற்றும் வசதிகள் செய்துதர ரூ. 1,22,300 அளவிற்கு மதிப்பீட்டை உயர்நீதி மன்றம் அனுப்பியுள்ளது. இச்செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது, விரைவில் பரிந்துரையின் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நீதிமன்றங்களில் இப்படிப்பட்ட அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலைமை இருப்பது பலவிடங்களில் உள்ளது என்பதை அரசு அறியுமா? தற்போது உயர்நீதிமன்றம் அளித்துள்ள பரிந் துறையின் அடிப்படையில் விரைவில் நடவடிக்கைகளை மேற் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய தேவை பல மாவட்டங்களில் உள்ள பல மட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் உள்ளன என்பது அரசுக்குத் தெரியும். ஆனால் இது பன்னெடுங்காலமாக உள்ள பிரச்னையாக இருப்பதால், எடுத்த எடுப்பிலேயே இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் காண நிதி ஆதாரம் சிறிது தடையாக இருக்கிறது. இதனை அரசு தற்போது ஆய்ந்து வருகிறது. விரைவில் பரிகாரம் தேடும். நாகப்பட்டினம் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. விரைவில் நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு நிதித்துறை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-20)

திரு. மு. அரங்கநாதன்: துணைத் தலைவரவர்களே, சுமார் 7,8 மாதங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட குன்னூர் முன்சீப் நீதிமன்றத்திற்கு இன்னும் ஊழியர்கள், ஸ்டாப்ஃஸ் போடவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதெல்லாம் இந்தக் கேள்வியில் வராது.

திரு. என். வரதராஜன்: துணைத் தலைவரவர்களே, இந்த நாகப்பட்டினம் நீதிமன்றம் பழுதடைந்து மிகவும் மோசமாக இருக்கிறது என்று மனுக்கள் எல்லாம் வந்து நீண்டநாட்கள் ஆகின்றன. ஆகவே, குறைந்த காலகட்டத்திற்குள், 3 அல்லது 4 மாதங்களுக்குள்ளாவது பழுது நீக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, உயர்நீதிமன்றத்திலிருந்து அண்மையில் 1,22,300 ரூபாய் செலவில் மேம்பாடு செய்யலாம் என்று வந்துள்ளது. அதை பொதுத் துறையும் உள்துறையும் ஏற்றிருக்கின்றன, மேலும் அது நிதித் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைந்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும்.

1979-1982 ஆம் கல்வி ஆண்டுகளில் கூட்டுறவுத்துறை மூலம் பயிற்சி பெற்ற மாணவர்கள்

*வினா எண்.29—திரு. இல. பலராமன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979-1980, 1980-1981, 1981-1982-ம் ஆண்டுகளில் கூட்டுறவுத்துறை மூலம் பயிற்சி பெற்ற மாணவர்கள் ஆண்கள், பெண்கள் எத்தனை பேர்?

(ஆ) இவர்களில் எத்தனை நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ)

வருடம்	ஆண்
1979-80	1042
1980-81	1020
1981-82	1108